DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 472/2025
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for

**A2 A4 எதிரிகள் ஆஜர் A1 A3 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | தியாகராஜன் |
| Father / Husband Name | முருகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.03.2026**

**முதல் விசாரணை:**

1.) நான் தற்போது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்து உதிவ ஆய்வாளர் ஆபிரகாம் அமலநாதன் என்பவரின் கையெழுத்து மற்றும் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும். தற்போது அவர் பணியிட மாறுதல் ஆகி சென்றுவிட்டதால் ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.07.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு ஆபிரகாம் அமலநாதன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது ரகு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 155/2019 இதச பிரிவுகள் 341 294(பி) 323 324 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த புகார் மனு அசாஆ 2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுதாகர் மற்றும் சாந்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அசாஆ 4 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் அனைவரும் செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் வழக்கில் காயம் பட்ட மஞ்சுளா சேகர் மற்றும் விஜயகுமார் அகியோருக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கிய மருத்துவர் சுகுமாரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகள் அசாஆ 6, அசாஆ 7 மற்றும் அசாஆ 8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கில் காயம் பட்ட விஜயகுமார் என்பவருக்கு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான இதச பிரிவுகள் 341 294(பி) 323 324 506(2) இருந்து 341

294(பி) 323  324 326 506(2)   ஆக மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள்341 294(பி) 323 324  326 506(2)  ன்  கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

3. நான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். சக அதிகாரி  சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவயிடம் சென்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் தாக்கல் செய்த இறுதி அறிக்கை ஆவணங்களை பார்வையிட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை  இல்லை**